DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
SESSIONS COURT FOR EXCLUSIVE TRIAL OF BOMB BLAST CASES,
CHENNAI AT POONAMALLEE, CHENNAI – 56

| | | | |
|---|---|---|---|
| **Spl S.CNo.** | **17/2022 (CC No.3/2018)** | Deposition of | **PW. 72** (LW. 73) |
| Name | Tr. Vetriventhan | Father's Name | |
| Street | | Village | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act of X of 1873 on the 15.09.2025.

**1 முதல் 5 எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்கள்.**

**முதல் விசாரணை தொடங்கிய நேரம் 2.47 P.M**

நான் தற்போது திருப்பூர் மாவட்ட குற்றப்பிரிவு துணை காவல் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 24.09.2016ம் தேதி துடியலூர் காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது காவல் நிலைய குற்ற எண் 735/2016 சட்டப் பிரிவு 302 இதச வழக்கினை மேற்கொண்டு புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு காலை 9 மணிக்கு துடியலூர் காவல் நிலையத்தில் பணியில் இருந்த போது தனபால் என்பவர் நிலையம் ஆஜராகி தனது அண்ணன் சசிக்குமார் பயன்படுத்திய நோக்கியோ செல்போன் கருப்பு கலர் -1, அதனுடைய மொபைல் ஐடியா எண். 8908697792 மற்றும் அதே செல்லின் BSNL SIM No. 9488719005 ஆகும். Cool Pad cell phone Model No.8298.100 ஆகியவற்றை எடுத்து ஆஜர் செய்தார். ஹோண்டா ஆக்டிவா ஸ்கூட்டர் பதிவு எண் TN38CD2212 என்ற வாகனத்தின் சாவிக் கொத்து ஒன்று, வெள்ளை நிற

ஹெல்மட் -1, பிரவுன் கலர் பர்ஸ் -1 அதில் பேங்க் ஆப் பரோடா ATM Card -1, City Union Bank ATM Card -1, PAN Card -1, Health Card-1, சசிக்குமாரின் ஓட்டுநர் உரிமம் நகல் -1, ABC Travel line Receipt -1, Indian Bank Sivanantha Colony Branch Receipt -1 ஆகியவற்றை பவடிம் 91 தயார் செய்து கைப்பற்றினேன். அந்த படிவம் **அ.த.சா.ஆ 272** ஆகும் (எதிரிகள் தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது). அதன்படி நான் கைப்பற்றிய நோக்கியா செல்போன் சா.பொ.8 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. நான் கைப்பற்றிய ஹெல்மட் சா.பொ.5 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. நான் கைப்பற்றிய ஹோண்டா ஆக்டிவா ஸ்கூட்டர் சாவிக்கொத்து சா.பொ.7 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. நான் கைப்பற்றிய Cool Pad Cell Phone சா.பொ.9 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. காலை 9.30 மணிக்கு நிலையத்தில் இருந்த வாகனம் சா.பொ.4 ஐ சாட்சிகள் பார்த்திபன் மற்றும் கவுதம் ஆகியோர் முன்னிலையில் திறந்து சோதனை பார்க்க அதில் TN38CD2212 வாகனத்தின் R.C Book copy and Pannai Motors Delivery Notice, Prasanna Motors retail invoice, IFCO TOKIO Insurance receipt, இந்து முன்னணி விநாயகர் சதுர்த்தி விழா நன்கொடை புத்தகங்கள் 12, பயன்படுத்தப்பட்ட இரசீது-1, இந்து முன்னணி லெட்டர் பேடு, சிட்டி யூனியன் பேங்க் பாஸ்புக், பாரதிய ஜனதா கட்சி ஆர்ப்பாட்ட நோட்டீஸ், இந்து முன்னணி பேட்ச்-1, பன்னை மோட்டார்ஸ் என்று எழுதப்பட்ட ரெக்சின் கைப்பை -1, மஞ்சள் நிற பிளாஸ்டிக்

கவர் -1 ஆகிவற்றை மகசரில் கைப்பற்றி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். அந்த கைப்பற்றுதல் மகசர் **அ.த.சா.ஆ 273(ஒரு தாள்)** ஆகும். அந்த மகசரில் கைப்பற்றப்பட்ட இந்து முன்னணி விநாயகர் சதுர்த்தி விழா நன்கொடை புத்தகங்கள் 12, பயன்படுத்தப்பட்ட இரசீது-1 **சா.பொ. 48** ஆகும். இந்து முன்னணி லெட்டர் பேடு **சா.பொ. 49** ஆகும். இந்து முன்னணி பேட்ச் **சா.பொ. 50** ஆகும். பாரதிய ஜனதா கட்சி ஆர்ப்பாட்ட நோட்டீஸ் **சா.பொ. 51** ஆகும். பின்னர் 10 மணிக்கு பிரபு என்பவர் நிலையம் ஆஜராகி கத்தரிப் பூ கலரில் உள்ள விசிடிங் கார்டு -1 அதில் AR Fashions MFR Cotton Hosery Ladies Innerwear விசிடிங் கார்டின் பின்புறம் பேனாவால் எழுதப்பட்ட நடு தீர்ப்பு தினத்தில் என்று எழுதப்பட்டிருந்தது அதனை படிவம் 91ல் கைப்பற்றினேன். சாட்சிகள் தனபால், சுதாகர், யமுனா, பிரபு, கலையரசன், நந்தகுமார், அசோக் குமார், ராஜன், நடராஜ், பிச்சை முத்து, பாாத்திபன் மற்றும் கவுதம் ஆகியோரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 25.09.2016 அன்று சாட்சிகள் வரதராஜ், உதயசங்கர் மற்றும் சரவணக்குமார் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 29.09.2016ம் தேதி 16.20 மணிக்கு பெள்ளிராஜ் என்பவர் ஆஜர் செய்த HIK Vision DVR-1, HDMI cable-1, Power adapter with Hard Disc-1 Toshiba 1TB capacity version 45 Tryn 2 NS W47 ஆகியவற்றை சாட்சிகள் மஞ்சுநாத், சுப்ரமணி ஆகியோர் முன்னிலையில் மகசரில் கைப்பற்றி சாட்சி கையொப்பம் பெற்றேன். அந்த கைப்பற்றுதல் மகசர் **அ.த.சா.ஆ 274 (ஒரு தாள்**) ஆகும். அ.த.சா.ஆ

274ல் கைப்பற்றப்பட்ட HIK Vision DVR-1, HDMI cable-1, Power adapter ஆகியவை **சா.பொ.52 வரிசை** ஆகும். பிறகு 17.10 மணிக்கு கொங்குநாடு கல்லூரி எதிரே உள்ள ஆஹாரம் என்ற கடையின் உரிமையாளர் புருஷோத்தம்மன் என்பவர் ஆஜர் செய்த AJHVA DVR with Hard Disc WD 4TB capacity Serial No.WCC4E5CRVPPA-1, Power adapter-1 ஆகியவற்றை சாட்சிகள் அந்தோனி பாபு மற்றும் சுந்தர் ஆகியோர் முன்னிலையில் மகசரில் கைப்பற்றி சாட்சி கையொப்பம் பெற்றேன். 21.40 மணிக்கு காந்திபுரம் பிரசன்னா பேக்கரி சந்திரபோஸ் என்பவர் ஆஜர் செய்த HIK Vision DVR with Hard Disc Toshiba Capacity 2TB S.No.16FTH80TS-6LD -1 and Power adapter -1 ஆகியவற்றை சாட்சிகள் பாலாஜி மற்றும் ஆனந்த் ஆகியோர் முன்னிலையில் மகசரில் கைப்பற்றி சாட்சி கையொப்பம் பெற்றேன். சாட்சிகள் பெள்ளிராஜ், மஞ்சுநாத், சுப்ரமணி, புருஷோத்தம்மன், அந்தோனி பாபு, சுந்தர், சந்திரபோஸ், பாலாஜி, ஆனந்த், மோகன்ராஜ் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 30.09.2016 அன்று DGP அவர்களின் உத்தரவின் படி வழக்கு கோப்புகள் மற்றும் வழக்கு சொத்துக்களை புலன் விசாரணைக்காக Crime Branch CID இடம் ஒப்படைத்தேன். DGP அவர்களின் உத்தரவை இணைத்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் வழங்கிய குறிப்பாணை **அ.த.சா.ஆ 275 (2 தாள்கள்)** ஆகும்.

///அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.///

**முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்பட்ட நேரம் 3.41 P.M**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

Sd/- (S.MALARVIZHI)
District and Sessions Judge.
Special Court under the National
Investigation Agency Act, 2008,
Chennai @ Poonamallee.